மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சிறுபாணாற்றுப்படைக் காட்டும் வாழ்வியல் கூறுகளுக்கும் இன்றைய வாழ்வியல் கூறுகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

# Cirupaanaatruppadai The Similarities and Differences between the Cirupaanaatruppadai Living Elements and The Living Elements of Today

சர்மிளா குமாளன் / Sarmila Kumalan[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: sarmilakumalan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஆற்றுப்படை நூல்களுள் சிறுபாணாற்றுப்படை பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கியது. ஏனெனில், மூவேந்தர்களின் ஆட்சி, கடையேழு வள்ளல்களின் படைமடமும் கொடைமடமும் நல்லியக்கோடன் என்ற வள்ளளின் (சிற்றரசன்) சிறப்பையும் குறிப்பிடுகின்றது. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட சிறுபாணாற்றுப்படை 269 அடிகளைக் கொண்ட நீண்ட விபரணைத் தன்மை உடையது. இதில் அமைந்துள்ள வாழ்வியல் கூறுகளுக்கும் இன்றைய வாழ்வியல் கூறுகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கருச்சொற்கள்:** ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, நல்லியக்கோடன், மூவேந்தர்கள், கடையேழு வள்ளல்கள்

**Abstract**

The Armed Forces texts cover a variety of specialties. This is because the rule of the Muvendars refers to the majesty and gift of the seven valleys and the splendor of the valley (Chitrarasan) called Nalliyakkodan. Cirupaanaatruppadai is one of the Aatruppadai having 269 lines. It mentioned about the Moovendar regime, Seven Chieftains Grants and Nalliyakkodan etc. The purpose of this article is to examine and explain the similarities and differences between the living elements in Cirupaanaatruppadai and the living elements of today.

**Keywords:** Aatruppadai, Cirupaanaatruppadai, Nalliyakkodan, Moovendar, Seven Chieftains Grants

**முன்னுரை**

சிறுபாணாற்றுப்படைப் பத்துப்பாட்டுள் மூன்றாவது நூலாக இடம்பெற்றுள்ளது. இஃது ஆசிரியப்பாவால் ஆனது. இந்நூல் 269 அடிகளைக் கொண்டது. குழல், யாழ் முதலான இனிமையான இசை தரும் கருவிகளை இசைப்பதில் அதாவது வாசிப்பதில் திறம் பெற்றவர்களைப் பாணர் என்பர். அதிலும் மிடற்று வழியாக (குரல் வழியாக-வாய் வழியே) இன்னிசையை இசைப்பவரை இசைப்பாணர் என்றும்; யாழ் என்னும் இசைக்கருவியை இசைப்பதில் திறம் பெற்றவர்களை யாழ்ப்பாணர் என்றும் அழைப்பர். யாழ்ப்பாணர்களுள் பெரிய யாழை இசைப்பவர்களைப் பெரும்பாணர் என்றும்; சிறிய யாழை இசைப்பவர்களைச் சிறுபாணர் என்றும் அழைப்பர். அந்த வகையில், நல்லியக்கோடன் என்பவன் ஒரு சிற்றரசன். அவனைப் புகழ்ந்து பாடிய சிறுபாணன் ஒருவன் பரிசு பெற்று வரும்பொழுது, அவன் தன் எதிரில் வந்த வேறு ஒரு சிறுபாணனை மன்னனிடம் சென்று பரிசுபெறும் வகையில் நெறிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஒரு சிறுபாணன் வேறு ஒரு சிறுபாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் சிறுபாணாற்றுப்படை என்னும் பெயர் பெற்றது. பழம் பெரும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு உரை எழுதி உள்ளார். பிற்காலத்தில் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனாரும் வேறு சிலரும் இந்நூலுக்கு உரை எழுதி உள்ளனர் (துரையரசன் 2017). சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். இச்சிறுபாணாற்றுப்படை நூல் மணிதர்களுக்குப் பல வாழ்வியல் கூறுகளை வளியுறுத்துகின்றது என்றால் மிகையாகாது.

வாழ்வியல் கூறுகள் என்ற சொல்லிற்கு ஆங்கில சொற்களஞ்சியம் குறிப்பிடும் பொருள் ‘ETHICS’ என்பதாகும். ‘ETHICS’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக தமிழில் அறநெறிகள், அறவியல், நன்னெறிக்கோட்பாடுகள், வாழ்வியல் ஒழுக்காறுகள், வாழ்வியல் நெறிகள், பண்புகள், ஒழுக்க முறைகள் முதலான சொற்கள் வழங்கி வருகின்றன. இவற்றுள் வாழ்வியல் நெறிகள் என்ற சொல்லே பரவலான சொல்லாகவும் வழக்கிலும் நிலைப்பெற்று உள்ளது எனலாம். சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும், ஒழுக்கங்களையும் விதித்துக் கொள்ள வேண்டும். (செ.விஜயலட்சுமி). இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகளைத்தான் நாம் வாழ்வியல் கூறுகள் என்று கூறுகிறோம். வேறு வகையில் குறிப்பிடுவது என்றால், ஒரு தனிமனிதன் பிறரிடம் எந்த எந்தப் பண்புகளை எதிர்பார்க்கின்றானோ, அந்தப் பண்புகளைத் தானும் பெற்றிருக்கவேண்டும் என எண்ணும்போது, அந்தப் பண்புகள் யாவும் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் கூறுகளாக ஆகிவிடுகின்றன. வாழ்வியல் கூறுகள் என்றென்றும் மாறாதவை. இவை உலகப் பொதுவானவை (Universal Ethics) எனப்படுகிறது. வாழ்வியல் கூறுகளைச் சங்க இலக்கிய நூல்களின் வழி பகுத்துக் கூறுவது பண்டைத் தமிழ் மரபு. அந்த மரபைப் புதுபிக்கும் வகையில் சிறுபாணாற்றுப்படை காட்டும் வாழ்வியல் கூறுகளுக்கும் இன்றைய வாழ்வியல் கூறுகளுக்கு உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## முந்தைய ஆய்வுகள்

சிறுபாணாற்றுப்படை காட்டும் வாழ்வியல் கூறுகளுக்கும் இன்றைய வாழ்வியல் கூறுகளுக்கு உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயும்போது பலரும் ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளனர். மேலும், இதற்கு முந்தைய ஆய்வுகள் யாவும் சிறுபாணாற்றுப்படை காட்டும் வாழ்வியல் கூறுகளுக்கும் இன்றைய வாழ்வியல் கூறுகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து எழுதியவர்கள் இல்லை என்றாலும், சங்க இலக்கிய வாழ்வியல் நெறிகளைப் பற்றி ஆய்வுகளை எழுதி வெளியிட்டவர்கள் பலர்.

குணசுந்தரி (2007), அவர்கள் எழுதிய 'சங்க ஆற்றுப்படை இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல்' எனும் ஆய்வுகட்டுரை, ஆற்றுப்படை நூலைப் பற்றி விளக்கும் வகையில் அமைந்துள்ளது. வைதேகி (2021), அவர்கள் எழுதிய தமிழ் உரையில் சிறுபாணாற்றுப்படை பாடல்களைப் குறித்து விளக்கியிருப்பதைக் காண முடிகிறது. த.சத்தியராஜ் (2016), அவர்கள் எழுதிய 8 பாணாற்றுப்படைகளில் வாழ்வியல் சிந்தனைகள் எனும் கட்டுரை பாணாற்றுப்படையின் வாழ்வியல் சிந்தனைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மு.சங்கர் (2020), அவர்கள் எழுதிய சிறுபாணாற்றுப்படை, எடுத்துரைப்பியல் நோக்கு எனும் ஆய்வுகட்டுரையின் வழி சிறுபாணாற்றுப்படையில் புதைந்து கிடந்த அழகியல் கூறுகள், விபரணைத் தன்மைகள் தெரிந்து கொள்ள முடிகின்றது. 'Ethics towards nature' எனும் ஆங்கில ஆய்வு கட்டுரையின் வழி இயற்கையை நோக்கிய நெறிமுறைகளை அறிய முடிகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

சிறுபாணாற்றுப்படையில் உள்ள பாடல்களின் வழி பெறப்படும் வாழ்வியல் கூறுகளை இன்றைய வாழ்வியல் கூறுகளுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுவதால் இவ்வாய்வில் ஒப்பிட்டு அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது.

## தரவுப் பகுப்பாய்வு

### நட்பின் தூய்மை

நட்பு என்பது ஒருவருக்கு ஒருவர் உள்ளம் நெருங்கி எவ்விதக் கலங்கமும் இல்லாது, கைமாறும் கருதாது, பாசமுடன் பழகி வாழ்வதாகும். இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் யாவும் தனித்து வாழ்வது இல்லை. ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு வகையில் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு வாழ்கின்றன (செந்தில்குமார்). அந்தப் பிணைப்பே நட்பு எனப்படுகிறது. நட்பிற்கு மிக முக்கியமானது நட்பின் தூய்மைக் கெடாமல் இருப்பதுதான். இன்றைய காலகட்டத்தில் ஒரு சில ஆண் பெண்ணுக்கு இடையில் இருக்கும் நட்பு திரிந்து காதலாக உருவெடுத்து

விடுகின்றது. ஆனால், அப்பொழுதே நமது சங்க இலக்கியத்தில் ஆண் பெண்ணின் நட்பிற்கு முன்னுதாரணமாக விளங்கியவர்கள் ஔவை அதியமான் நட்பு என்றால் அதனை நிச்சயம் யாராலும் மறுக்கவும் மறக்கவும் முடியாது. ஆண் பெண் நட்பிற்கு இலக்கணமாக எளிதில் ஔவை அதியமானை காட்டிலும் பிறரை உதாரணமாகக் கூற முடியாது. இதற்கு காரணம் அமிழ்தம் போன்ற நெல்லிக் கனியை தாம் உண்ணாமல் ஔவைக்கு ஈந்தவன் அதியன் (குணசுந்தரி,2007). நீண்ட நாள் உயிர் வாழ வழிவகுக்கும் அரிய நெல்லிக்கனி தனக்குக் கிடைத்தபோது, அக்கனியைத் தான் உண்டால் இன்னும் தன் நாட்டின் பரப்பு அதிகமாகும், பல உயிர்கள் மேலும் அழியும். ஆனால், அக்கனியை ஔவை உண்டால் நீண்ட காலம் அவர் உயிர் வாழ்வார் என்றெண்ணி அக்கனியை ஔவைக்குக் கொடுத்தான் அதியமான். இதற்கு தக்கச் சான்று சிறுபாணாற்றுப்படையில் வரும்,

………………மால் வரைக்<br>
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி 100<br>
அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த,<br>
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்<br>
அரவக்கடல் தானை அதிகனும் (99-103)

எனும் பாடலின் வழி நம்மால் அறிய முடிகின்றது. நட்பு என்பது உலகிலேயே உன்னதமான ஒன்றாகும். அத்தகைய நட்பின் உன்னதத்தை இன்று பலர் இழந்து விடுகின்றனர். ஓர் ஆணும் பெண்ணும் இணைந்திருந்தாலே அதற்கு காதல் என்றாகிவிடுகின்றது இன்றைய காலத்தில். ஓர் ஆண் இன்னொரு ஆணுடன் நீண்ட காலம் நட்பு கொள்ள முடிகின்றது. ஆனால், ஓர் ஆண் ஒரு பெண்ணோடு நட்பு கொண்டு அது நட்பாகவே தொடர்ந்து பயணிப்பது எளிதில் முடியாத ஒன்றாகிவிட்டது. ஆக, நட்பிற்குள் ஆண் பெண் பாகுபாடு சிறுபாணாற்றுப்படையைக் காட்டிலும் இன்றைய மக்களின் வாழ்க்கையில் அதிகம் உள்ளது எனலாம். இதற்கு முக்கிய காரணம் ஒரு சில மானிடர்கள் இன்னமும் நட்பின் உன்னதத்தை உணராததே ஆகும்.

**விருந்தோம்பல்**

விருந்து ஓம்பக்கூடிய பண்பு மனிதர்களின் மனத்தில் ஊறிப்போன ஒரு செயல்பாடு (முனைவர் த. சத்தியராஜ் 2016). பண்டைத் தமிழரிடம் விருந்தோம்பல் பண்பாடு சிறப்பாக அமையப் பெற்றிருந்தது. இப்பண்பாடு தமிழரின் இல்லற வாழ்க்கையை அளக்க உதவும் அளவு கோலாகவும் விளங்குகின்றது. தாம் உண்ணும் உணவு எதுவாக இருந்தாலும் அதனை, தம்மை நாடி வந்த விருந்தினர்களுக்கும் கொடுத்து தாமும் உண்டு மகிழ்ந்தனர். தெரிந்த உறவினர்கள் மட்டும் அன்றி முன் பின் தெரியாத அயலார்களுக்கும் உணவிட்டு அகம் மகிழ்ந்திருந்தனர். அந்த வகையில் விருந்தோம்பல் பண்பு இன்றியமையாப் பண்புகளுள் ஒன்றாக விளங்குகிறது. தங்களின் இல்லத்திற்கு விருந்தினர் தினந்தோறும் வந்து கொண்டு இருக்க வேண்டும் என்று விருந்தை எதிர்நோக்கும் தமிழ் மக்கள் அன்று இருந்தனர். இரவு பகல் என்று பாராமல் எப்பொழுதும் விருந்தினர் வரவை எதிர்நோக்கி இருந்தனர். வரும்

விருந்தினர்களின் மனம் கோணாமல் விருந்து படைக்கும் இயல்பினராய் தமிழர்கள் விளங்கினர் (நா. பொ. செந்தில்குமார்) என்பதை, சிறுபாணாற்றுப்படையின் வாழ்வியல் கூறுகளின் வழி அறிய முடிகிறது. இன்றைய காலகட்டத்தில், விருந்து வைக்கும் அளவிற்கு இயலாவிட்டாலும் சாலை ஓரங்களில் இருக்கும் முதியவர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்கு அல்லது ஆதரவு அற்றவர்களுக்கு உணவு கொடுத்து உதவும் பண்பு இன்றைய இளைஞர்களிடையே வளர்ந்துக் கொண்டு வருவதைச் சமூக ஊடகங்களின் வழி நம்மால் பார்க்க முடிகின்றது. இன்றைய வாழ்வியல் கூறுகளில் விருந்தோம்பலும் ஒன்றாக இருப்பின் விழாக்காளங்களின் போது மட்டும் இப்பண்பு உள்ளது மாறாக இயன்றவர்கள் இயலாதவர்களுக்கு அடிக்கடி விருந்தோம்பல் வைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

**விலங்குகளிடத்தில் அன்பு கொள்ளுதல்**

அதனையடுத்து, சில ஐந்தறிவு உயிரிணங்களைச் பலர் செல்லப் பிராணியாக வளர்ப்பதை நம்மால் காண முடிந்தாலும் இன்னும் சிலர் எனக்கு நாய்தான் பிடிக்கும், பூனையைப் பிடிக்காது என்று பூனையை வதம் செய்வதும்; எனக்குப் பூனையைதான் பிடிக்கும் என்று மற்ற உயிரினங்களை வதம் செய்பவர்களும் ஒரே சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால், நாய், பூனை, மீன் என்று பேரம் பார்க்காது அனைத்து விளங்குகளிடத்தும் அன்பு கொள்வது நமது வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகும் என்பதை,

> வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
> கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
> அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
> பெருங்கல் நாடன் பேகனும் (84-87)

எனும் சிறுபாணாற்றுப்படை பாடலின் வழி நம்மால் அறிய முடிகின்றது. பருவமழை தவறாது பொழிவதால் காட்டு மயில் அகவியதைக் கேட்டு அது குளிரால் நடுங்கியது என எண்ணி இரக்கமுற்று தம் போர்வையைக் கொடுத்தான் பேகன். தோகை விரித்து ஆடுவது என்பது இயற்கை என்று பேகனின் அறிவு சொல்கிறது மாறாக இல்லை அது தன்னைப் போலக் குளிரால் நடுங்குகிறது என்கிறது பேகனின் உணர்வு. ஆனால், இன்றைய காலகட்டத்தில் மயிலின் வேதனையைக் கருதாது சுய மகிழ்ச்சிக்காக அதனுடைய இரகைப் பரித்து வீட்டில் அழகிற்கு வைத்துக் கொள்ளும் நம்மில் சிலருக்கு இந்தச் செயல் வேடிக்கையாகதான் இருக்கும். அதாவது மயிலுக்குப் போர்வையைத் தருவது அறிவுடைமையா? அது சரியா? தவறா? எனப் பல வகையான கேள்விகள் நமக்கு தோன்றுவதற்கான காரணம் இன்று நம்மில் பலர் அனைத்து உயிர்களிடத்தும் அன்பை செலுத்த வேண்டும் என்ற மனிதனின் வாழ்க்கை கூறுகளை மறந்து விட்டனர். இருப்பினும் இன்று நம்மில் பலர் விலங்குகளின்மீது அன்பு கொண்டிருந்தாலும்கூட இன்னும் சிலர் அதனைத் துன்புறுத்தவும் செய்கின்றனர் என்பது மிகவும் வருத்திற்குறியதாகவே உள்ளது. அதுவும் நமது மலேசிய நாட்டில் சில இடங்களில் நாய்களைச் சுட்டு கொள்வதையும் நம்மால் பார்க்க முடிகின்றது. இதுபோன்ற செயல் காலப்போக்கில் நாய்களைக்கூட பார்க்க வேண்டும் என்றால் விலங்குகள்

காப்பகதிற்கு செல்ல வேண்டிய அவல நிலைக்கு நம்மை தல்லிவிடுமோ என்ற பயம் மனதில் ஓர் ஓரமாக இருக்கத்தான் செய்கிறது. இவையாவும் இன்றைய மக்கள் வாழ்வியல் கூறுகளைப் பின்பற்றாததே ஆகும். ஆகவே, விலங்குகிடத்தில் அன்பைச் செலுத்த வேண்டும் என்ற வாழ்க்கை நெறியைப் சிறுபாணாற்றுப் பாடலின் வழி அறிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுவோம்.

### இயற்கையை நேசித்தல்

இயற்கை என்பது இறைவன் படைத்த எழில்மிகு அம்சங்களாகும். ஆறு, கடல், குளம், அருவிகள், மலைகள், சூரிய உதயம், காடுகள், மிருகங்கள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் என பல விடயங்கள் இயற்கையாக அமைந்துள்ளன. அத்தைகைய இயற்கையை நேசிக்க வேண்டும் என்ற வாழ்வியல் கூறு சிறுபாணாற்றுப்படையில் வரும்,

சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும் (87 – 91)

என்ற பாடலின் வழி அறிய முடிகின்றது (வைதேகி, 2021). இப்பாடலில் பறம்பு மலைக்கு அரசனான பாரி முல்லைக் கொடி படர தம் பெரிய தேரினை ஈந்தான். முல்லைக் கொடி படர சிறுபந்தல் போதுமே என்று நாம் நினைக்கலாம். ஆனால், அந்தக் கண்ணோட்டத்தில் முல்லைக் கொடியைப் பாரியால் பார்க்க முடியவில்லை. முல்லைக் கொடி, தான் படர்வதற்கு வழி இல்லையே என்று வாடுவது போல பாரிக்குத் தோன்றியதால் அடுத்த நொடியே அக்கொடியின் துயர்நீக்க, தன்னிடமிருந்த தேரினை அக்கொடி படர்வதற்காக அவ்விடத்தே விட்டுச்செல்கிறான். இந்த அளவு வாழ்க்கை கூறுகளைச் சிறுபாணாற்றுப்படையில் பின்பற்றியுள்ளனர் என்பது பெருமை அளித்தாலும் இன்றும் பல இடங்களில் சிலர் சட்டவிரோதமாகக் காடுகளையும் மரங்களையும் அழித்து கொண்டுதான் இருக்கின்றனர். கடந்த ஆண்டு 24ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் கில்லானில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கோஸ்மோ நாளிதழ் வெளியிட்டுள்ளது. இது போன்று நடப்பதற்கான காரணம் மனிதர்கள் தங்களது சுயநல போக்கினால் தன்னுடைய வாழ்வியல் நெறியை மறந்து விடுவது மிகவும் வருத்தத்திற்குரியதாகவே உள்ளது. மனிதன் தனது அறிவியில் வளர்ச்சியில், இயற்கையைச் சிதைக்க பட்டுவரும் இந்தக் காலகட்டத்தில் கூட, இயற்கை தன்னை நாளுக்கு நாள் மெருகேற்றி புதிய உன்னதத்தை மனிதர்க்குக் கொடுக்கிறது என்றால் மிகையாகாது. அத்தகைய இயற்கையைப் போற்றி பாதுகாப்பதே ஒவ்வொருவரின் தலையாய வாழ்வியல் கூறாகும் என்பது தின்னம்.

**கலைஞரையும் கலையையும் போற்றுதல்**

கலை என்பது அனைவரிடமும் எளிதில் கிடைப்பதல்ல அவை இறைவனின் வரப்பிரசாதம். அப்படிப்பட்ட கலையையும் கலைஞரையும் மதிக்க வேண்டும் என்பது நமது வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகும். இன்று நம்மில் பலர் அதனை மதிக்கச் செய்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

…………………….. நளி சினை
நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்து
குறும் பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் (107-111)

என்ற பாடலில் சிறுபாணாற்றுப்படையில் கலைஞரை மதித்துப் போற்றியுள்ளனர் என்பது வெளிப்படுகின்றது. அதாவது, சிறுபாணாற்றுப்படையில் கடையேழு வள்ளல்களில் ஒருவரான ஓரி கூத்தாடும் கலைஞர்களின் கலைத்திறனை மதித்து வளமான பல நாடுகளை வழங்கி மகிழ்ந்தான். அதுமட்டுமல்லாது, பாரி தனது சுய விருப்பமாக அனைத்து பரிசுகளையும் பாராட்டுகளையும் வழங்கியுள்ளார். இது போன்று களைஞர்களைப் பாராட்டும் வாழ்வியல் கூறு இன்றளவும் நம்மிடையே இருக்கின்றது என்றால் மிகையாகாது. ஆனால், அதனை போற்றும் விதம் வேண்டுமானால் மாறுபட்டிருக்கலாம் தவிர களைஞர்களைப் பாராட்டும் கூறு நம்மிடையே நிலைத்து உள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு தக்க சான்று, தற்பொழுதையக் காலகட்டத்தில் விருதளிப்பு விழா என்று களைஞர்களுக்கு மிகவும் விமரிசையாக நடத்தப்படுகின்றது. கலைஞர்களையும் கலையையும் போற்றும் வகையில் பல வரிசைகளில் இன்று விருதுகள் வழங்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளன. இதன்வழி இன்றளவும் கலைஞர்களையும் கலையையும் போற்றும் பண்பு இன்றைய மக்களிடையே இருகின்றது என்பது வெள்ளிடைமலை. ஆக, சிறுபாணாற்றுப்படையிலும் இன்றைய வாழ்க்கை கூறுகளிலும் ஒற்றுமை உள்ளதை நம்மால் காண முடிகிறது.

**ஈகைத்தன்மை**

தொடர்ந்து, மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை என்பது நாம் அனௌவரும் அறிந்ததே. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுவான். ஆனால், போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு சென்று விடுகிறது. மாறாக ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும் என்பதற்குத் தக்க சான்று கடையேழு வள்ளள்களில் ஒருவரான நள்ளி என்பவராவார். அதாவது, பசிப்பிணியோடு வாடி வந்த இரவலர்களுக்கு அதிகமாகப் பொருள் வழங்கி அவர்களின் மன நிறைவு கண்டு மகிழ்ந்தவன் நள்ளி என்பது,

.............................. கரவாது
நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை, 105
துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு
நளி மலை நாடன் நள்ளியும் (103-107)

எனும் பாடலின் வழி வெளிப்படுகின்றது. நம்மில் சிலர் உறவினர்களோ தெரிந்தவர்களோ வீட்டிற்கு வந்து ஏதாவது ஒன்றைக் கேட்டார்கள் என்றால், அனைத்தையும் எடுத்து கொடுத்து விடுவதில்லை. மாறாக ஒரு சிலதை மறைக்கச் செய்கின்றனர். சில நேரங்களில் உதவ இயன்றும் இல்லை என்றுகூட சொல்லிவிடுகின்றனர். நண்பர்கள் கேட்டால்கூட கிள்ளிதான் கொடுக்கின்றோம். மாறாக, ஈகை அறத்தை வாழ்க்கை கூறுகளில் ஒன்றாக நினைத்துச் செயல்பட்டால் மனிதனாய் பிறந்த பிறவி பலனை முழுமையாக அடையலாம்.

## நிறைவுரை

இந்த ஆய்வு கட்டுரையின் முடிவாகச் சொல்ல விழைகின்ற கருத்து யாதெனின் சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்வியல் நிலை இன்றைய வாழ்வியல் நிலையும் வேறுபட்டுள்ளதால், சங்க இலக்கிய நூல்களுல் ஒன்றான சிறுபாணாற்றுப்படையில் காணப்படும் வாழ்வியல் கூறுகளில் சில கூறுகள் இன்றைய வாழ்வியல் கூறுகளுடன் ஒன்றினைந்தும், சிலவை வேறுபட்டும் காணப்படுவதற்கான காரணம் யாதெனில் சங்க காலத்து மக்களின் நிலையும் இன்றைய மக்களின் வாழ்வியலும் வேறுபட்டுள்ளதே இதற்கு காரணமாகும். சிறுபாணாற்றுப்படை வழி சங்கம் காலத்தில் மக்கள் பல வாழ்வியல் கூறுகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர் என்பதை அறிய முடிகிறது. இலக்கியங்கள் யாவும் மக்களை நல்வழிப்படுத்துவதற்காகத் தோன்றியவையாக உள்ளன என்பதனை இக்கட்டுரையின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்


https://sangamtranslationsbyvaidehi.com/%e0%ae%a4%e0%ae%ae%e0%ae%bf%e0%ae%b4%e0%af%8d-%e0%ae%89%e0%ae%b0%e0%af%88-%e0%ae%9a%e0%ae%bf%e0%ae%b1%e0%af%81%e0
https://sathiyaraj.pressbooks.com/chapter/%e0%ae%aa%e0%ae%be%e0%ae%a3%e0%ae%be%e0%ae%b1%e0
க. துரையரசன், (2017), 4.2 பாணரின் வறுமையும் செல்வமும் | தமிழ் இணையக் கல்விக்கழகம் TAMIL VIRTUAL ACADEMY (tamilvu.org) http://www.tamilvu.org/ta/courses-degree-d011-d0113-html-d0113442-18896
செ. விஜயலட்சுமி, Muthukamalam.com / Essay - Seminar Essays - கட்டுரை - கருத்தரங்கக் கட்டுரைகள்https://www.jnu.ac.bd/journal/assets/pdf/10_1_249.pdf
த. சத்தியராஜ் (2016). ஒப்பியல் உள்ளும் புறமும் – Simple Book Production.
நா. பொ. செந்தில்குமார் Muthukamalam.com / Essay general - கட்டுரை - பொதுக்கட்டுரைகள். (n.d.). Muthukamalam.com, முத்துக்கமலம் இணைய இதழ் https://www.muthukamalam.com/essay/general/p70.htm
ரெ.குணசுந்தரி(2007), ‘சங்க ஆற்றுப்படை இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல்’ file:///C:/Users/USER/Downloads/tamil%20-%20gunasundari.pdf
வைதேகி (2021), தமிழ் உரை – சிறுபாணாற்றுப்படை. Sangam Poems Translated by Vaidehi.